# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.
## CC-29/2022
## Prosecution witness - PW 3

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.முருகன் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1 to A3 absent. Petition U/s 317 Cr.P.C filed and allowed.)

19.05.2026 - 12.00 PM

முதல் விசாரணை:-

1. நான் ஒப்பிலான் கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 வேல்மயில் எங்கள் ஊர்க்கார் தான். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். கடந்த 5,6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் சொந்த வேலை விசயமாக சாயல்கடி காவல் நிலையத்திற்கு சென்ற போது போலீசார் என்னிடம் ஒரு வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்று கொண்டார்கள். மற்ற படி வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. மேற்படி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் விசாரிக்கவில்லை.

பிறழ் சாட்சி:-

சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதன் அடிப்படையில் அனுமதி அளிக்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை: -**

கடந்த 11.07.2021ம் தேதி 13.00 மணிக்கு கருப்பசாமி மற்றும் என் முன்னிலையில் சாயல்குடி போலீசார் வழக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாக போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது வழக்கிற்கு விரோதமாக எதிரியின் மிரட்டலுக்கு பயந்து எதிரியை வழக்கிலிருந்து காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்/G.தங்ககார்த்திகா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ)
கடலாடி